©
தமிழ்நாடு அரசு
2018

பதிவெண்: ஈஈ. 2

# ஈரோடு மாவட்ட அரசிதழ்

ஆணையயின்படி வெளியிடப்பட்டது.

ஈரோடு, நவம்பர் 28, 2018

[விளம்பி, கார்த்திகை 12 – திருவள்ளுவர் ஆண்டு 2049] [எண் 10

பொருளடக்கம்

| | | | | | பக்க எண் |
|---|---|---|---|---|---|
| உள்ளாட்சித்துறை அறிவிக்கை | .. | .. | .. | .. | 177 |
| பொது அறிவிக்கை | .. | .. | .. | .. | 209 |

## உள்ளாட்சித்துறை அறிவிக்கை

[ந.க. எண். 1137/2018 (இ–1), நாள் : 15–10–2018]

### பவானி நகராட்சி

பவானி நகராட்சி பகுதியில் உள்ள குடிநீர் இணைப்புகளுக்கு ( வீட்டு உபயோகம் மற்றும் வீட்டு உபயோகம் அல்லாதது) குடிநீர் வைப்புத் தொகை மற்றும் குடிநீர்க்கட்டணம் பவானி நகர்மன்ற தீர்மானம் எண்.217, நாள்: 31.07.2018-ன்படி கீழ்காணும் விவரப்படி 01.10.2018 முதல் உயர்வு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

மேலும் குடிநீர் வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டண உயர்வு செய்வது குறித்து நாளிதழில் 26.08.18 -ல் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி கட்டண உயர்வு குறித்து பொது மக்களுக்கு ஆட்சேபணை இருந்தால் நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு 30 நாட்களுக்குள் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டதன் பேரில் வரப்பெற்ற ஆட்சேபணை மனுக்கள் குடிநீர் விநியோக பராமரிப்பு செலவினத்தினை கருத்தில் கொண்டு மனுக்கள் நிராகரிக்கப்பட்டு இந்நகர்மன்ற தீர்மான எண். 264 நாள்: 29.09.2018 ன்படி குடிநீர்க்கட்டணம் மற்றும் வைப்புத் தொகை உயர்வு செய்து வசூலிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்மானத்தின் அடிப்படையில் கீழ்காணும் விபரப்படி 01.10.2018 முதல் உயர்வு செய்யப்பட்ட குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை வசூல் செய்யப்படும் என அறிவிக்கப்படுகிறது.

**I.குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை**

| வ.எண். | உபயோகம் | தற்போது உள்ள குடிநீர் வைப்புத் தொகை ரூ. | 01.10.2018 முதல் உயர்வு செய்யப்பட உள்ள குடிநீர் வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | வீட்டு உபயோகம் | 2000.00 | 3000.00 |
| 2 | வீட்டு பயன்பாடுஅல்லாதவை ( வணிகம் மற்றும் தொழிற்சாலை உபயோகம்) | 5000.00 | 6000.00 |

II. குடிநீர் கட்டணம்

| வ.எண். | உபயோகம் | மாதம் ஒன்றுக்கு தற்போது உள்ள குடிநீர் கட்டணம் | 1.10.2018 முதல் உயர்வு செய்யப்பட உள்ள குடிநீர் கட்டணம் |
|---|---|---|---|
| 1 | வீட்டு உபயோகம் | 1. மாதம் ஒன்றுக்கு 10,000 லிட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு குறைந்த பட்ச கட்டணம்Rs.100 | 1. மாதம் ஒன்றுக்கு 10,000 லிட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு குறைந்த பட்ச கட்டணம் Rs.150/- |
| | | 2. மாதம் ஒன்றுக்கு 10,000 லிட்டர்களுக்கு மேல் உபயோகத்திற்கு 1000 லிட்டர்களும் மற்றும் அதன் பாகத்திற்குRs.15/- | 2. மாதம் ஒன்றுக்கு 10,000 லிட்டர்களுக்கு மேல் உபயோகத்திற்கு 1000 லிட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு Rs.20/- |
| 2 | வீட்டுஉபயோகம் அல்லாதது தொழிற்சாலை மற்றும் வணிக உபயோகத்திற்கு | 1. மாதம் ஒன்றுக்கு 10,000 லிட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு குறைந்த பட்ச கட்டணம் Rs. 450/- | 1. மாதம் ஒன்றுக்கு 10,000 லிட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு குறைந்த பட்ச கட்டணம் Rs. 500/- |
| | | 2. மாதம் ஒன்றுக்கு 10,000 லிட்டருக்கு மேல் உபயோகத்திற்கு 1000 லிட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு Rs. 45/- | 2. மாதம் ஒன்றுக்கு 10,000 லிட்டருக்குமேல் உபயோகத்திற்கு 1000 லிட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு Rs. 50/- |

பவானி,
15-10-2018.

(ஒ.இ.,) X X X ,
ஆணையாளர் (பொ),
பவானி நகராட்சி.